10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 164 சனிக்கிழமை நவம்பர் 04 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## மூன்று நாட்களுக்கு மழை நீடிக்கும்

யாழ்ப்பாணம், நவ.04

வளிமண்டல தாழமுக்கம் காரணமாக வட மாகாணத்தில் கன மழை பெய்து வருகின்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது. இந்நிலையில் இன்னமும் மூன்று நாட்களுக்கு மேக மூட்டத்துடனான இம் மழைக்கோலம் நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் கடந்த 05 நாட்களாகப் பெய்து வரும் மழையினால் தற்போது 57.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்களப் பொறுப் 06

## மைத்திரிக்கு மகிந்த 7 நிபந்தனைகள்

கொழும்பு, நவ.04

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடவேண்டுமாயின், தங்களுடைய ஏழு நிபந்தனைகளையும் நிறைவேற்றவேண்டுமென, ஒன்றிணைந்த எதிரணி நிபந்தனை விதித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து முன்னெடுக்கும் கூட்டாட்சியிலிருந்து விலக வேண்டும் என்பது ஒன்றிணைந்த எதிரணியின் பிரதான கோரிக்கையாகும்.

ஒன்றிணைந்த எதிரணியின் ஆதரவைக் கோரி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அனுப்பி 06

## அரியாலைப் படுகொலை இரு அதிரடிப்படையினர் கைது



யாழ்ப்பாணம், நவ.04

அரியாலை கிழக்கு, மணியந்தோட்டம் பகுதியில் இளைஞன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக, இலங்கை சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் உள்ளிட்ட இரண்டு பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுப் பிற்பகல் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டதாக, பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். பண்ணையில் உள்ள சிறப்பு அதிரடிப்படை முகாமில் பணியாற்றும், உதவிப் பரிசோதகர் மல்லவாராச்சி பிரதீப் நிசாந்த, கான்ஸ்டபிள் ரத்நாயக்க முதியான் 06



## வல்லையில் விபத்து இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், நவ.04

வடமராட்சி வல்லை வெளியில் நேற்று மாலை ஹயஸ் வாகனமும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இவ்விபத்தில் இருவாகனங்களின் சாரதிகளும் காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் கொழும்புத்துறை மற்றும் அச்சுவேலியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-01)

# மாணவர் அழைப்பு தமிழ்க் கூட்டமைப்பு உதாசீனம்





ஈபிஆர்எல்எவ், ஈபிடிபி, சு.க எம்.பிகள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 04

உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளினை முன்னெடுக்க கலந்துரையாடலுக்கு வருமாறு வடக்குக் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் விடுக்கப்பட்ட அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளது. நேற்று மாலை நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவிடும் என எதிர்பார்க்கப்படும் ஈபிஆர்எல்எவ் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் 06

## “தீர்வை நெருங்கி விட்டோம்”

### இப்படிச் சொல்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், நவ. 04

“70 வருட தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினைப் பெறும் தருணத்தினை எட்டியுள்ளோம். பிளவுபடாத நாட்டுக்குள் சமனான அதிகாரப்பகிர்வுகளை வலியுறுத்தியுள்ளோம். இதில் வெற்றியடைவதற்காகவே பயணித்துக்கொண்டிருக்கின்றோம். எமது வெற்றிக்கு மக்களின் ஆதரவு வேண்டுமென 06

## விஜயகலா சொன்ன விநோதமான விளக்கம்

கொழும்பு, நவ.04

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான கலந்துரையாடலுக்கு வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் அதில் பங்கேற்காமை தொடர்பில் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் விளக்கமளித்துள்ளார். அவர் தனது விளக்கத்தில், “வித்தியா கொலைக்குப் பின்னராக அவ்விடம் சென்றதால் தான் தேவை 06

### போராட்டத்தைக் கைவிடுங்கள்

## மாணவர், மக்கள் பிரதிநிதிகள் இன்று அரசியல் கைதிகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ.04

உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளினை முன்னெடுக்க நேற்று குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் வடக்குக் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்று கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அக் கலந்துரையாடலில் பங்கேற்ற பிரதிநிதிகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் அடிப்படையிலேயே குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதனிடையே இன்று பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளுடன் நேற்றைய கலந்துரையாடலில் பங்கேற்ற மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், 06



## புலிகள் இல்லாததுதான் பிரச்சினை

யாழ்ப்பாணம், நவ.04

விடுதலைப்புலிகளின் கை ஓங்கியிருந்த போது விட்டுக் கொடுக்க முன் வந்தவர்கள் புலிகள் அழிந்ததும் பழைய 06

## அளம்பில் துயிலுமில்லம் துப்புரவுப் பணி



முல்லைத்தீவு, நவ.04

அளம்பில் துயிலுமில்ல துப்புரவுப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி அளம்பில் துயிலுமில்லப் பகுதியில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர். இவர்களுடன் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா - ரவிகரனும் துயிலுமில்ல துப்புரவுப் பணிகளை மேற்கொண்டிருந்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உள்ளூராட்சித் தேர்தலில்
# ஐ.தே.கவே வெற்றிபெறும்

ஹட்டன், நவ.04

ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றிபெறும் என்று ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

அதற்கான வேலைத்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் இப்பொழுதே முன்னெடுத்து வருகின்றோம் என ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

ஹட்டன் நோர்வூட் பகுதிக்கு நேற்று விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும்,

இந்த நாட்டில் அரசியல் அமைப்பு மாற்றங்கள் ஆரம்ப காலங்களில் இடம்பெற்றுள்ளது. ஆனால் மக்களின் அபிப்பிராயங்கள் பெறப்படாமலே முன்னெடுக்கப்பட்டது. இதனால் பல்வேறு பிரச்சினைகளும் உருவானது.

ஆனால் இன்று புதிய அரசியல் யாப்பு ஒன்றுக்காக முனைகின்ற பொழுது நாம் விரும்புவது இந்த நாட்டில் வாழக்கூடிய அனைத்து கலாசாரங்களையும், பின்பற்றி நடக்கும் மக்களுடன் அவர்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப ஒன்றிணைந்த பேச்சுவார்த்தை ஒன்றினை முன்னெடுத்து அதனூடாக அரசியல் யாப்பினைக் கொண்டு செல்வதேயாகும் என்றும் குறிப்பிட்டார். (உ)



# வவுனியாவில் பஸ் விபத்து நால்வர் படுகாயம்

வவுனியா, நவ.04

கொழும்பிலிருந்து, வவுனியா நோக்கிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளாகியதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று அதிகாலை கல்குணாமடு பூவே பாலத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக ஈரட்டை பெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பஸ் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி இந்த விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சாரதியின் தூக்கமின்மையே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை ஈரட்டை பெரிய குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## மானுஸ் தீவிலுள்ள அகதிகளை
# வலுக்கட்டாயமாக வெளியேற்ற நடவடிக்கை



சிட்னி, நவ.04

ஆஸ்திரேலியாவிலுள்ள மானுஸ் தீவிலுள்ள அகதிகளை வலுக்கட்டமாயமாக வெளியேற்றப் போவதாகக் கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவிற்குள் சட்ட விரோதமாக நுழைய முயன்றவர்களைத் தடுத்து வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பப்புவா நியுகினியின் மானுஸ்தீவு தடுப்பு தற்போது கைவிடப்பட்டுள்ளது. எனினும் அங்குள்ள 600க்கும் மேற்பட்ட அகதிகள் அங்கிருந்து வெளியேற மறுத்து வருகின்றனர் அவர்களுக்கான அத்தியாவசியத்தேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை காரணமாக இலங்கையர்கள் உட்படப் பல நாடுகளை சேர்ந்த அகதிகள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த அகதிகளை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவோம் என ஆஸ்திரேலியக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மானுஸ்தீவு தடுப்பு முகாமிலிருந்து வெளியேற்றப்படுவதை எதிர்நோக்கும் அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களிற்கான புதிய தங்குமிடம் இன்னமும் தயாராகவில்லை என ஐ.நா நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

மின்சாரம் மற்றும் ஏனைய வசதிகள் துண்டிக்கப்பட்ட நிலையிலும் 600க்கும் மேற்பட்ட அகதிகள் முகாமில் தொடர்ந்தும் தங்கியிருப்பதாகவும் தெரிவித்துள்ளது. (உ)

# மாணவனை தாக்கிய அதிபருக்கு விளக்கமறியல்

மாத்தறை, நவ.04

மாத்தறை ஊறுபொக்க பகுதியில் மாணவர் ஒருவரைத் தாக்கிய பாடசாலை அதிபர் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மாணவனின் தந்தை பொலிஸ்நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய, அதிபர் கைது செய்யப்பட்டு, மொரவெவ மேலதிக நீதவான், சீ.எஸ். திஸாநாயக்க முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

தலைமுடியை வெட்டவில்லை என்ற காரணத்துக்காக தரம் 11 இல் கல்விப் பயிலும் மாணவனை அதிபர் நேற்றுக் காலை கூட்டத்தின் போது கடுமையாகத் தாக்கியுள்ளார். இந்நிலையில் தாக்குதலுக்குள்ளான மாணவனுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டதையடுத்து அவர் ஊறுபொக்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ)

# பணத்துக்காக நாங்கள் ஆசைப்படவில்லை

கொழும்பு, நவ.04

பெல்லன்வில விமலரத்ன தேரரின் கருத்துக்கு மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையமும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளரான பாக்கியசோதி சரவணமுத்துவும் பணத்துக்காக புதிய அரசியல் அமைப்பினை உருவாக்குவதற்கு முயற்சிப்பதாக பெல்லன்வில விமலரதன தேரர் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு சிங்கள ஊடகமொன்று செய்தியும் வெளியிட்டிருந்தது. எனினும் விமலரத்ன தேரரின் இந்தக் கருத்துக்குக் கடும் ஆட்சேபம் வெளியிடுவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது.

கடும்போக்குவாத செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் பெல்லன்வில விமலரதன தேரர் கருத்து வெளியிட்டிருப்பது கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. புதிய அரசியல் சாசனத்துக்கு ஆதரவான தரப்பினர் தேசத் துரோகிகள் என அடையாளப்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. (உ)

# கடந்த அரசாங்கத்தில் கடுமையான பிரச்சினை

கொழும்பு, நவ.04

கடந்த அரசாங்க ஆட்சியின் இறுதிக் காலப் பகுதியில் பல்வேறு நெருக்கடிகள், பிரச்சினைகள் காணப்பட்டதாக நீதி அமைச்சர் தலதா அதுகோரல தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாத நிலையினால் அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பலன்கொட, பம்பகின்ன பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (உ)

# கிழக்கு இனமுறுகலுக்கு முன்னாள் முதலமைச்சரே காரணம்

மட்டக்களப்பு, நவ.04

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் இன முரண்பாடுகளுக்கு வாழைச்சேனை பொலிஸாரும், முன்னாள் முதலமைச்சருமே முழுப் பொறுப்பாகும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய அவர்,

"கடந்த சில [illegible] மாவட்டத்தின் சில பகுதிகளில் இன்முறுகல் தோன்றியுள்ளதாகக் கூறுகின்றார்கள், அது ஏன் எப்படி வந்தது என்று பலருக்குத் தெரியாது. ஒரு சம்பவம் இடம்பெறும் போது அந்த சம்பவத்துடன் தொடர்புபடுகின்றவர்கள் தப்பித்துவிடுகின்றனர், அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றனர்.இவ்வாறு அப்பாவிகள் பாதிக்கப்படுவதற்கு இடமளிக்க முடியாது, எந்த இனத்தைச் சேர்ந்தவர், என்றாலும் அவர்களுக்கு துன்பம் ஏற்படுத்தக்கூடாது - என்றார். (உ)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
சனி, 04 நவம்பர் 2017 ethirolijaffna@gmail.com

# எல்லாம் தேர்தலில் தெரியும்

கொட்டும் மழை நடுவேயும் அரசியல் கைதிகளுக்காகப் போராடிவரும் பல்கலைக்கழக மாணவர்களின் அழைப்பை தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று, பதவியைப் பிடித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் , மாகாண சபை உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக உதாசீனம் செய்துள்ளனர்.

கைதிகளின் பிரச்சினையை அரசியல் பலமுள்ள குரலாக ஒலிக்கச் செய்வதன் மூலம், உடனடியாகத் தீர்வைக் காண பல்கலைக்கழக மாணவர்கள் நினைத்தே, கட்சி பேதமின்றி சகல நாடாளுமன்ற , மாகாண சபை உறுப்பினர்களையும் கலந்துரையாட அழைத்திருந்தனர்.

ஆனால் சிவசக்தி ஆனந்தனைத் தவிர வேறெவரும் கூட்டமைப்பின் சார்பில் பங்கேற்கவில்லை. அவர்கூட கூட்டமைப்போடு முரண்பட்டு, எப்போதும் விலகலாம் என்ற நிலையில் இருப்பவர். அவரைத் தவிர, ஈ.பி.டி.பி யின் டக்ளஸ் தேவானந்தா, சுதந்திரக் கட்சியின் அங்கஜன் ஆகியோர் மட்டுமே– மொத்தமாக மூன்று பேர்– நேற்றைய கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர். ஐ.தே.கவின் சார்பில் தெரிவான, இராஜங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் 'வித்யாவின் கொலைக்குப் பின்னரான களேபரத்தை அடக்கப்போய், சுவிஸ்குமாரை விடுவிக்கப் போனதாகக் கதை வந்ததால் இப்படியான பொது நிகழ்வில் கலந்துகொள்ள முடியாது' என முன்னரே பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தகவல் அனுப்பியிருந்தார்.

மற்றைய எம்.பி மார் ஏன் வரவில்லை?

விடாமல் பெய்யும் மழையில் கரைந்துவிடுவார்களோ?

அப்படியும் இருக்கமுடியது. ஏனெனில் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பிள்ளையார் விடுதியில் புதிய அரசியலமைப்புத் தொடர்பான கலந்துரையாடலில் மாவை.சேனாதிராசா , சுமந்திரன் ஆகியோர் பங்கெடுத்திருந்தனர். அந்த விடுதியில் இருந்து வெறும் இரண்டு கிலோமீற்றருக்குள் தான் பல்கலைக்கழகம் இருக்கிறது. அவர்களின் சொகுசு வாகனத்தில் ஏறிக் குந்தினால் ஐந்தே நிமிடத்தில் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுவிட்டு அதன் பின் ஆறுதலாக 4 மணிக்கு தமது கலந்துரையாடலுக்குப் போயிருக்கலாம். ஆனால் அதைச் செய்ய மனமில்லை.

சிலவேளைகளில் டக்ளஸ் அங்கஜன் போன்ற மாற்றுக் கட்சி எம்.பிக்கள் கலந்து கொண்டதால் நாங்கள் போகவில்லை என்ற உளுத்துப்போன கதையை மீண்டும் எடுத்துவிடக் கூடும். அப்படியானால் இதே டக்ளஸ், அங்கஜன் ஆகியோர் கலந்துகொண்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கும் போகாமல் இருந்திருக்க வேண்டுமே? நாடாளுமன்றத்துக்கும் போயிருக்கக் கூடாதே. அங்கும் அவர்கள் வருவார்கள் அல்லவா.

மனமிருந்தால் மட்டுமே மார்க்கம் இருக்கும். 'இவர்கள் கிள்ளுக்கீரைகள் அழைத்து நாங்கள் போவதா?' என்ற இறுமாப்பே இந்த உதாசீனத்துக்குக் காரணம். ஆனால் யானை தன் தலையில் தானே மண்ணள்ளிக் கொட்டுவதுபோல, கூட்டமைப்பும்–குறிப்பாகத் தமிழரசுக் கட்சி– தன் அஸ்தமனத்துக்கு தானே வழி கோலுகின்றது. ஏற்கனவே அரச ஒத்தோடிகளாக கூட்டமைப்பினர் மாறிவருவதாக மக்கள் எண்ணங்கொள்ளும் தருணத்தில், தமிழ் மக்களின் மனச்சாட்சியாகச் செயற்படுகின்ற, பல்கலைக் கழக மாணவர்கள் என்ற மகோன்னதமான சக்தியை எட்டி உதைத்ததோடு, அரசியல் கைதிகள் விடயத்திலும் தங்கள் அக்கறையின் அளவை கூட்டமைப்பினர் நேற்றைய மழைப்பொழுதில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் இருந்த காலத்திலேயே , புலிகளுக்கு அடுத்த மக்கள் அபிமானம் பெற்ற சக்தியாக விளங்கியவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள். இப்போது புலிகள் இல்லாத சூழலில், பல்கலைக்கழக மாணவர்களே தமிழ் மக்களின் போராடும் சக்தியாக இருக்கிறார்கள். அந்த சக்தியை உதாசீனம் செய்வதென்பது ஒட்டுமொத்த தமிழினத்தையேஉதாசீனம் செய்வதற்கு ஒப்பானதே. ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவனும் கிட்டத்தட்ட சுமார் 100 வாக்குகளையாவது தீர்மானிக்கும் சக்தி கொண்டவனாகவே இருப்பான். ஆக மொத்தத்தில் தன்னுடைய மிகப்பெரிய வாக்குவங்கியை கூட்டமைப்பு தானே தாரைவார்த்து விட்டிருக்கிறது.

கைதிகள் விடயத்துக்காகக் கலந்துரையாட வருமாறு பல்கலைக்கழக மாணவர்கள் விடுத்த அழைப்பை உதாசீனம் செய்ததன் பயனையடுத்து வரும் தேர்தல் கூட்டமைப்பினருக்கு மிகத் தெளிவாகவே உணரவைக்கும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## ஹட்டனில் கடை அடைப்பும் பேரணியும்



ஹட்டன், நவ.04

ஹட்டன் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் நீக்கப்பட்ட "தொண்டமான்" என்ற பெயரை மீண்டும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கொட்டகலை நகரில் நேற்று ஒரு மணி நேரம் கடையடைப்பு உள்ளிட்ட மாபெரும் எதிர்ப்பு முன்னெடுக்கப்பட்டது. இதில் நூற்றுக்கணக்கான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவாளர்கள் பங்கேற்று எதிர்ப்புக் கோசங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜ், பிலிப்குமார் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (உ)

## முதுசித்தம் சஞ்சிகை வெளியீடு



வவுனியா, நவ.04

யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் வவுனியா நிலையத்தின் கல்வியியல் முதுமாணி மாணவர்களின் முதுசித்தம் சஞ்சிகை வெளியீடும்ஒன்று கூடலும் வவுனியா றோயல் கார்டன் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. யாழ். பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தின் வவுனியா நிலையத்தில் கல்வி பயிலும் கல்வியியல் முதுமாணி கற்கைப்பீட நான்காவது அணி மாணவர்களால் இச் சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது. கல்வியியல் முதுகலை மாணி மாணவர் மன்றத் தலைவர் ல.சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இச் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன், யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு. மிகுந்தன், யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (உ)

# சவாரி ஓடிய பஸ் தடம்புரண்டு விபத்து

## முள்ளிவாய்க்காலில் சம்பவம்



முல்லைத்தீவு, நவ.04

முல்லைத்தீவு பரந்தன் வீதியில் முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று மாலை பயணிகளுடன் அரச பஸ் ஒன்று புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. தனியார் பஸ் ஒன்றும் அரச பேஷரூந்து ஒன்றும் ஒன்றையொன்று போட்டி போட்டு மிக வேகமாக பயணம் செய்த நிலையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த அரச பஸ் பயணிகளுடன் வீதியை விட்டு விலகி புரண்டு விபத்துக்குள்ளகியுள்ளது. இதில் குறித்த பஸ்ஸில் பயணம் செய்த ஐந்து பயணிகள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (உ)

# 4 கிலோ கஞ்சாவுடன் இளைஞன் கைது

வவுனியா, நவ.04

வவுனியா பேருந்து நிலையத்தில் நேற்று கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து, புத்தளம் நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தில் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் 4 கிலோ 105 கிராம் கேரளா கஞ்சாவினை தனது பயணப்பொதியில் எடுத்துச் சென்றபோதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியா பொலிஸாருக்கு குறித்த இளைஞன் மீது சந்தேகம் ஏற்படவே இளைஞனை சோதனையிட்டபோது குறித்த இளைஞனிடத்தில் கஞ்சா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபரை மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தவுள்ளதா கவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## கலைவிழா நிகழ்வு



பருத்தித்துறை, நவ.04

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் 2017ஆம் ஆண்டுக்கான நிறைமதி கலைவிழா நிகழ்வு நேற்று நடைபெற்றது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமாரும் வடமாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாஸும் கலந்து சிறப்பித்தார். (உ-11)

## இன்று நாளும் கோளும்

04.11.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 18 ஆம் நாள்

பௌர்ணமி பகல் 11.40 வரை | பரணி மாலை 03.12 மணி வரை | அமிர்தசித்தயோகம்

இராகுகாலம் 09.00 - 10.30 | சுபநேரம் 07.45 - 08.45 | எமகண்டம் 01.30 - 03.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைதி | ஆர்வம் | சுகம் | சினம் | முயற்சி | பரிவு | பாராட்டு | சிக்கல் | வாழ்வு | பொறுமை | அசதி | புகழ் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயின் பாவனையாளர்கள்
# இலங்கையில் திடீர் அதிகரிப்பு

கொழும்பு, நவ.04
இந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் அதிக மானவர்கள் ஹெரோயின் போதைப் பொருள் பயன்பாட்டுக்கு இலக்காகி யுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

அது நூற்றுக்கு 63 வீதமாகப் பதிவாகியுள்ளதாக அந்த சபையின் பேச்சாளர் ஒருவர் கூறினார். புகையிலை மற்றும் வேறு வகையான போதை மாத்திரைகளைப் பயன்படுத்துவோர் நூற்றுக்கு 34 வீதமாகப் பதிவாகியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இது தவிர போதைப் பொருள் பயன்பாடு தொடர்பாக இந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் 3200 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ)



## கடை உடைத்தவருக்கு விளக்கமறியல்



திருகோணமலை, நவ.04
திருகோணமலையில் வர்த்தக நிலையமொன்றை உடைத்து பணம் மற்றும் பொருட்களை கொள்ளையிட்ட சந்தேகநபரை இந்த மாதம் பத்தாம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான வழக்கு நேற்றைய தினம் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, லிங்க நகர் பகுதியில் வர்த்தக நிலையமொன்றை உடைத்து 25,000 ரூபா பணம் மற்றும் பொருட்களைத் திருடியதாக வர்த்தக நிலையத்தின் உரிமையாளரால் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது. குறித்த முறைப்பாடு லிங்கநகர் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய நபருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், அவரை கடந்த புதன்கிழமை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## மறுபடியும் முதலில் இருந்து
# புதிதாய் ஆரம்பியுங்கள்



கொழும்பு, நவ.04
“அரசமைப்புத் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படும் சகல செயற்பாடுகளையும் இரத்துச்செய்து, புதிதாக ஆரம்பிக்கப்படுமாயின், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கூட்டவிருக்கின்ற சர்வகட்சிக்கு நான் போவதற்குத் தயார்” என்று, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கோட்டையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

“பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாட்டில் முன்னெடுக்கப்படும் புதிய அரசமைப்புச் செயற்பாட்டுக்குள் கைக் கோர்க்கும் வகையில், சர்வ கட்சிக் கூட்டம் நடத்தப்படுமாயின், அதில் தாம் பங்கேற்கப்போவதில்லை என்றும் அதற்கு தாங்கள் ஒருபோதும் தயாரில்லை” என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

“தற்போது முன்னெடுக்கப்படும் அந்தச் செயற்பாடுகளை அவ்வாறே கைவிட்டுவிட்டு, புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவேண்டுமென, ஜனாதிபதி அந்தந்தப் பிரிவுகளுக்கு யோசனைகளை முன்வைக்கவேண்டும்” என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

## “ஏக்கிய” என்ற வசனத்தை தவிர
# வேறு எதனையும் ஏற்க முடியாது



கொழும்பு, நவ.04
“அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் ‘ஏக்கிய’ என்ற வசனத்தைத் தவிர வேறெதனையும் ஜாதிக ஹெல உறுமய ஏற்றுக்கொள்ளாது” என, அதன் பொதுச் செயலாளரும் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவிக்க தெரிவித்தார்.

“ஏக்கிய என்பது, நாட்டின் அடிப்படைச் சட்டம் ஒரு நிறுவனத்தின் ஊடாகவே முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே ஜாதிக ஹெல உறுமயவின் கருத்தாகும்” என்றும் அவர் குறிப்பட்டார்.

“வேறு நிறுவனங்கள் பலவற்றுக்கு, சட்டத்தின் அதிகாரங்கள், அரசியலமைப்பின் ஊடாக பிரித்துக் கொடுக்கப்படுமாயின், அந்த ஏக்கியவில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை” என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

## 29 பொலிஸாருக்கு பதவி உயர்வு

கொழும்பு, நவ.04
பொலிஸ் பரிசோதகர்கள் 29 பேருக்கு பதவி உயர்வு வழங்க பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறித்த 29 பேரும் பிரதான பொலிஸ் பரிசோதகர்களாக பதவி உயர்வு பெறவுள்ளனர். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்தப் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது. (உ)



## தந்தையின் வானில் சிக்குண்டு
# மூன்றரை வயது குழந்தை பலி!

கொழும்பு, நவ.04
வீரகெட்டிய பகுதியில் தந்தை செலுத்திய வானின் சில்லில் சிக்குண்டு நேற்றுக் காலை மூன்றரை வயதுக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

வானிலிருந்து கீழே விழுந்த குழந்தை காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தந்தை வானைப் பின் நோக்கி செலுத்திய போது, குழந்தை கதவைத் திறந்து கீழே விழுந்து சில்லில் சிக்குண்டுள்ளதாக தெரிய வந்துள்ளதாக, வீரகெட்டியப் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

## பிரச்சினையும், வாழ்க்கையும் “பேமனென்ற்” இல்லை

காலமை தருமு சிரிச்சுக் கொண்டு வந்தான். “என்னடா ஏதேன் சுவிப் ரிக்கற் விழுந்திட்டுதோ? ” எண்டு நக்கலாத் தான் கேட்டன். “ஓம் தம்பி சுவிப் விழுந்த மாதிரித்தான்“ எண்டான்.

“என்னடாப்பா நடந்தது? வடிவாச் சொல்லு“ எண்டு கேட்டதுக்கு “ கள்ளிறக்கிறதுக்குப் பிரச்சினை இல்லையாம். எங்கடை பிரச்சினையைப் பற்றி அங்கஜன் தம்பி கொழும்புக்குப் போய் ஜனாதிபதியோடையும், பிரதமரோடையும் கதைச்சாப்போலை அவை சொல்லிச்சினமாம் “இலங்கைக்கு ஒரு சட்டந்தான். வடக்குக்கு ஒண்டு. தெற்குக்கு வேறை எண்டு ஒண்டும் கிடையாதாம். கள்ளிறக்கிற ஆக்களை நாங்கள் கைவிட மாட்டம்“ எண்டு இரண்டு பேரும் கோரஸ்ஸாச் சொல்லியிருக்கினமாம்.

1972 இலை சங்கம் தொடங்கினவை. அண்டைக்குத் துவக்கம் நாங்கள் முறைப்படி அரசாங்கத்திட்டை அனுமதி எடுத்து வரியும் கட்டித்தான் தொழில் செய்யிறம். இப்ப கித்துள் இறக்கிறாக்களுக்கு அந்த அனுமதி தேவை இல்லையெண்டு சொல்லியிருக்கு. அதுக்காக பனையிலை இருந்து கள்ளை இறக்க வேண்டாம் எண்டு சொல்லேல்லையாம்.

இனிவாற அமைச்சரவைக் கூட்டத்திலை கித்துளுக்கு எப்பிடி அனுமதி தேவை இல்லையோ? எப்பிடி வரி கட்டாமல் தொழில் செய்யலாமெண்டு சொல்லீனமோ? அப்பிடி பனங் கள்ளுச் சீவுற ஆக்களுக்கும் செய்து தருவம் எண்டு அவை வாக்குறுதி கொடுத்திருக்கினமாம். அதுக்குரிய அமைச்சரவைப் பத்திரங்களும் இப்ப றெடியாக்கி வைச்சிருக்கிறதாச் சொன்னவை எண்டு கொம்யூட்டரிலை வந்திருக்கிறதா காலமை கோப்பிரேஷனிலை சொல்லிச்சினம் எண்டதை எனக்குச் சொல்லிப்போட்டுப் போகத்தான் தருமு காலைமையே வந்தவன்.

அவனும் பாவம். உந்த ஒரு வருவாயை வைச்சுக் கொண்டுதான் அவன்ரை எல்லா விளையாட்டும். மூத்தது பெடிச்சி. இப்பதான் அவள் படிச்சு முடிச்சுச் சமுர்த்தியிலை வேலை. அவள் வேலைக்குப் போய் வர ஒரு மோட்டச் சைக்கிளும் லோன் எடுத்துத்தான் வாங்கினவன். இரண்டாவது பெடி. கம்பஸிலை படிக்கிறான். அவனுக்கும் செலவு சித்தாயம் எண்டு கனக்க. மூண்டாவது வட்டன் இப்பதான் ஸ்கொலசிப் எடுத்துப்பாஸ். வேறை பள்ளிக்குடத்துக்கு வரச் சொல்லி இருக்கு. ஆனால் அவன் படிச்ச பள்ளிக்குடத்துப் பிரின்சிப்பல் தான் கூடின கவனமெடுக்கிறதெண்டு சொல்லி அவனை வேறை பள்ளிக்குடத்துக்கு மாத்த வேண்டாம் எண்டு மண்டாடுறாராம்.

தருமன்ரை கதை கேக்கேக்கை தான் ஒன்டை நினைப்பன். தருமன் எந்தளவுக்கு கஸ்டப்பட்டானோ அந்தளவுக்கு இப்ப நல்லா இருக்கிறான். அப்பு சொல்லுறவர். உனக்கு எப்பெண்டாலும் பிரச்சினையும், சிக்கலும் வரேக்கை சூரியனைப் பாத்துக் கொள். அப்பு உதைச் சொல்லித் தரேக்கை மணிக் கூடு இல்லை. நான் இப்ப சங்கடம் எண்டு வரேக்கை மணிக் கூட்டைத்தான் பாக்கிறது. அதின்ரை முள்ளுக் கம்பியளும் ஒரிடத்திலை நில்லாது. அதுக்கு நிரந்தரமான இடம் எண்டு ஒண்டும் இல்லை. அது மாதிரித்தான் பிரச்சினையும் நிரந்தமில்லை. அது வந்து போகும். வில்லங்கமெண்டு வரேக்கை இனி எல்லாரும் மணிக் கூட்டைப் பாருங்கோ. நீங்கள் மனுசராவிடுவியள். பிரச்சினையளைச் சமாளிக்க பழக வேணும். விளங்குதே?

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயிலில் மோதி இளைஞன் பலி



கொழும்பு, நவ.04

முந்தல், மங்கள ஹெலிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு ரயிலில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி வேல்சுமனபுர பகுதியைச் சேர்ந்த சுசாந்த பண்டார (வயது -28) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

புத்தளத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# உள்ளூராட்சித் தேர்தலை ஊழலுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்துங்கள்



கொழும்பு, நவ.04

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை, அரசாங்கத்தின் ஊழல் மோசடிக்கு எதிரான மக்கள் கருத்தெடுப்பாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். இந்தத் தேர்தலை அரசாங்கம் விருப்பத்துடன் மக்களுக்கு வழங்கவில்லை என்றும், தேர்தலை மிகவும் பிற்போட்டு விட்டு இறுதியாக எடுக்கப்பட்ட தீர்மானம் இதுவென்றும் அவர் கூறினார். இதேவேளை ராஜபக்ச அரசாங்கத்தைப் போன்றே தற்போதைய அரசாங்கமும் மேற்கொள்கின்ற ஊழல் மோசடிகளுக்கு எதிரான மக்களின் கருத்துக்கணிப்பாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று விஜித ஹேரத் கேட்டுக் கொண்டுள்ளார். (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!





**04.11.1967**

எம்.ஜி.ஆர். கொலை முயற்சி வழக்கு: நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் கொலை முயற்சி வழக்கில் நடிகர் எம். ஆர். ராதாவுக்கு ஏழு ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

# இலங்கைக்கு ரோந்துப் படகுகள் ஆஸ்திரேலியாவால் அன்பளிப்பு

கொழும்பு, நவ.04

இலங்கைக்கு மூன்று ஸ்டபி கிராப்ட் வகை ரோந்துப் படகுகளை ஆஸ்திரேலியா வழங்கவுள்ளது. நேற்று முன்தினம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த, ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம் ரேன்புல், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த போது இதற்கான உறுதி மொழியை அளித்துள்ளார். இலங்கைக் கடலோரக் காவல் படையின் பயன்பாட்டுக்காகவே, அதிவேக ஸ்டபி கிராப்ட் படகுகளை அவுஸ்ரேலியா வழங்கவுள்ளது. இவை கரையோர நடவடிக்கைகளுக்குப் பெரும் பயனுள்ளதாக இருக்கும் என்று அவுஸ்ரேலியப் பிரதமர் கூறியுள்ளார். ஆட்களைக் கடத்தும் நடவடிக்கைகள், போதைப்பொருட் கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கைகளில் இலங்கையின் ஒத்துழைப்புக்கும் ஆஸ்திரேலியப் பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இலங்கைக் கடற்படைக்கு மூன்று அதிவேக ரோந்துப் படகுகளை ஆஸ்திரேலியா வழங்கியிருந்தது. இந்த நிலையில், மேலும் மூன்று அதிவேக ரோந்துப் படகுகளை வழங்கவுள்ளது. (உ)

# கொழும்புக்கு விரைந்தன இந்தியப் போர்க் கப்பல்கள்



கொழும்பு, நவ.04

இந்தியக் கடற்படையின் மூன்று போர்க்கப்பல்கள் நல்லெண்ண மற்றும்பயிற்சிப் பயணமாக நேற்றுக் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

இந்தியக் கடற்படையின் ஆழ் கடல் ரோந்துக் கப்பல்களான திர், சுஜாதா ஆகியனவும், இந்தியக் கடலோரக் காவல்படையின் சாரதி என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலுமே கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளன. இவை ஐந்து நாட்கள் இங்கு தரித்து நிற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் போது இந்தக் கப்பல்கள், இலங்கை கடற்படைக் கப்பல்களுடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபடவுள்ளன. (உ)

# பாகிஸ்தான் கப்பலும் இலங்கை வருகிறது



கொழும்பு, நவ.04

பாகிஸ்தானின் கடற்படைக் கப்பல் சயிப் நல்லெண்ண விஜயம் நிமித்தம், நாளை இலங்கைக்கு வருகைதரவுள்ளது.

இக் கடற்படைக் கப்பலானது, எதிர்வரும் 8ஆம் திகதி வரை இலங்கையில் தரித்திருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வரவேற்பு நிகழ்வு, நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. இதன்போது, இருதரப்பு கடற்படை வீரர்களும் பல்வேறு தொழில்சார் நடவடிக்கைகள், பயிற்சிகள் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

எவ்22பி வகையான பிஎன்எஸ் சயீப் கப்பலானது, சீன பாரம்பரியத்தைச் சேர்ந்த போர்க்கப்பலாகும். இக் கப்பலானது ஆயுதங்கள், சென்சார்கள் மற்றும் இயந்திரங்களைத் தாங்கிய பல்வேறு விதமான கடல்சார் பாதுகாப்புத் திட்டங்களில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

# மலையகத் தமிழர்களை தேசிய இனமாக அங்கீகரிக்குக!

கொழும்பு, நவ.04

"மலையகத் தமிழர்கள் அரசியலமைப்பில் தேசிய இனமாக அங்கீகரிக்கப்படவேண்டும்" என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்புக்காக வழிநடத்தல் குழுவில் இடைக்கால அறிக்கை மீதான நான்காம் நாள் விவாதம் நேற்று முன்தினம் அரசியலமைப்பு நிர்ணய சபையில் நடைபெற்றது.



இதில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர், முன்மொழியப்பட்டுள்ள இரண்டாம் சபைக்கு மாகாணசபை பிரதிநிதிகளே உள்வாங்கப்படுவார்கள் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் சபைக்கு சிறுபான்மை சமூகங்களின் பிரதிநிதிகளே உள்வாங்கப்பட வேண்டும். அதற்காகவே இரண்டாம் சபை முன்மொழியப்பட்டது.

இது குறித்து இணக்கப்பாட்டை காண பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

புதிய அரசியலமைப்பில் மலையகத் தமிழர்களும் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிலைப்பாடு. ஆனால், இடைக்கால அறிக்கையில் நாங்கள் முன்வைத்த கோரிக்கை இடம் பெறவில்லை . இடைக்கால அறிக்கையில் அனைத்து சிறுபான்மை மக்களின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. யார் அந்த சிறுபான்மை இனங்கள் என்று இதில் அடையாளப்படுத்தப்படவில்லை. இலங்கையில் நான்கு தேசிய இனத்தவர்கள் வாழ்கின்றனர் இதனை அடையாளப்படுத்துவதே எமது கோரிக்கை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

# இனவாத அடிப்படையில் இடமாற்றம் வழங்கவில்லை



கொழும்பு, நவ.04

அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றங்கள் இனவாதத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிலர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை மறுப்பதாகத் தெரிவித்துள்ள கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இனபேதம், குலபேதம் மற்றும் மதவாதத்தை இல்லாதொழித்து நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடிவது, கல்வியின் ஊடாக மாத்திரமே என்றும் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கைபாடசாலைகளுக்கிடையான கட்டுரை மற்றும் சித்திரப் போட்டியின் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே கல்வியமைச்சர் இதனைக் கூறினார். கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டில் தேசிய ஒற்றுமையின்மை காரணமாக நாம் பின்னோக்கிச் சென்றுள்ளதாகக் கூறிய அமைச்சர் தற்போது புதிய பாதையில் பயணிக்கும் வாய்ப்புக் கிட்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (உ)

# கஞ்சா வைத்திருந்த ஒருவர் கைது



அம்பாறை, நவ.04

அம்பாறை, சம்மாந்துறை பிரதேசத்தில் 05 கிராம் கேரள கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சம்மாந்துறை, உடங்கா பிரதேசத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (உ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமாலையின் ஒரு பகுதியை விடுவிக்க நடவடிக்கை

கிளிநொச்சி, நவ.04

முகமாலைப் பகுதியில் வெடிபொருட்களை அகற்றி மிக விரைவில் ஒரு பகுதியை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முகமாலைப் பகுதியில் வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதேவேளை முகமாலைப் பகுதி மிகவும் வெடிபொருட்கள் ஆபத்தான பகுதியாக காணப்படுகின்றது. இப்பகுதியில் வெடிபொருட்களை அகற்றுவதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நீண்ட காலம் யுத்தம் இடம்பெற்ற பகுதியாக இது காணப்படுவதனால் அதிகளவான வெடிபொருட்கள் ஆபத்தான பகுதியாக காணப்படுகின்றது என்றும் தெரிவித்த தன்னார்வத்தொண்டு நிறுவனமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் பிரதிநிதி, தற்போது ஒரு பகுதி வெடிபொருட்கள் அகற்றப்பட்டு அதன் பணிகள் நிறைவு பெற்று வருகின்றன. அதனை மிக விரைவில் மக்கள் மீள்குடியேறுவதற்கு கையளிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். 258 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது மீள்குடியேற்றத்திற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளபோதும் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் கடந்த ஏழு ஆண்டுகளாக வெளியிடங்களிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

ஏமாறுவது மக்கள் மாத்திரமே!




## ரயில் கடவைகளை அவதானமாகக் கடவுங்கள்

யாழ்ப்பாணம், நவ.04

வடக்கில் தொடர்ச்சியாகக் கடும் மழை பெய்துவரும் நிலையில் ரயில் கடவைகளில் அபாய சமிக்கைகள் குறித்து அவதானமாக இருக்குமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் அபாய சமிக்கைகள் செயலிழந்துள்ளன. சில இடங்களில் தொடர்ச்சியாக ஒலி எழுப்பியவாறு காணப்படுகின்றன. சாவகச்சேரி சங்கத்தானை மற்றும் அரசடி பகுதிகளில் புகையிரத கடவையில் உள்ள அபாய சமிக்கை ஒலி தொடர்ந்து ஒலித்தவாறு இருப்பதனால் பொதுமக்கள் புகையிரத கடவைகளை அச்சத்துடன் கடந்து சென்றுள்ளனர். நேற்றுக் காலையில் இருந்து குறித்த புகையிரத கடவைகளியில் உள்ள அபாய சமிக்ஞை ஒலிகள் தொடர்ந்து ஒலித்தவாறிருந்தன. இதனால் ரயில் வரும் சமயங்களில் கூட மக்கள் கடவையை கடக்க முற்படுவதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

## அனுமதி இன்றியே ஆலயத்துக்கு 5 இலட்சம் ரூபா கொடுக்கப்பட்டது

கிளிநொச்சி, நவ.04

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் ஆலயம் ஒன்றின் அன்னதான மண்டபம் அமைக்க ஐந்து இலட்சத்து இருபதாயிரத்து 650 ரூபாவை பொதுச் சபையினதோ, அல்லது கூட்டுறவுத் திணைக்களத்தினதோ அனுமதியின்றியே சட்டத்திற்கு புறம்பாக அன்பளிப்புச் செய்தது என கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி நல்லைநம்பி தெரிவித்துள்ளார்.

பொதுசபையின் அனுமதியுடன் நிதியை அன்பளிப்புச் செய்ததாக நிர்வாகம் தவறான தகவலை தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தொடர்ச்சிகள்

### தீர்வை நெருங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழில் உள்ள அவரது இல்லத்தில் இன்று புதிய அரசியலமைப்பு தொடர்பாக ஊடகவியலாளர்கள் சிலருக்கு விளக்கமளித்த அவர்,

"புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையின் விவாதம் கடந்த நான்கு நாட்கள் நாடாளுமன்றில் இடம்பெற்றன. இவ்விவாதத்தின் போது, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கொண்டு வந்த அரசியலமைப்பு வரைபினை ஏற்றுக்கொள்வேன் என அமைச்சர் டிலான் சொன்னதுடன், வரைபிற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்றும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். அந்த வரைபிற்கு சுதந்திரக் கட்சியின் இளம் அமைச்சர்கள் ஆதரவளிப்பார்கள் என நினைக்கின்றேன்" - என்றார். (எ)

### மாணவர், மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் மற்றும் கே.சிவாஜிலிங்கமும் ஈபிடிபியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா,ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று போராட்டத்தை நிறுத்துமாறு அரசியல்கைதிகளை வலியுறுத்தவுள்ளனர்.

இதேவேளை அரசியல் கைதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட மறுக்கும் நிலையில் தமது நிர்வாக முடக்கல் போராட்டம் தொடரும் என்றும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அறிவித்துள்ளனர். (எ)

### மூன்று நாட்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தின் அதிகமான மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்ட இடமாக தீவகப்பகுதி காணப்படுவதுடன், அங்குள்ள மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இதுவரையும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். இரண்டாம் இடைநிலைப் பருவப்பெயர்ச்சி காலநிலையாலேயே தற்போது மழைவீழ்ச்சி ஏற்படுகின்றது. இதனால் மழைவீழ்ச்சி தொடர்ந்தும் மூன்று நாட்களுக்கு நீடிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

### மைத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துள்ள கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில், ஒன்றிணைந்த எதிரணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் 42 பேர் கையொப்பமிட்டு, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருக்குக் கடிதமொன்றையும் அனுப்பிவைத்துள்ளனர். இந்தக் கடிதத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் கையொப்பமிட்டுள்ளார்.

1. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து முன்கொண்டுசெல்லும் கூட்டாட்சியிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி விலகவேண்டும்.

2. எவ்விதமான கட்டுப்பாடுகளுமின்றி, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

3. தேசிய சொத்துகளை, வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வது அல்லது பரிமாற்றம் செய்யும் நடவடிக்கைகளிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் விலகவேண்டும். அதற்கெதிராகக் குரல் கொடுக்கவேண்டும்.

4. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மதிப்புகளுக்கு அமைவாக, அதி வணக்கத்துக்குரிய தேரர்களின் எண்ணங்களுக்கு மதிப்பளிக்கவேண்டும்.

5. நாட்டைத் துண்டாடும் வகையில், அரசாங்கம் வியூகம் வகுக்கும் அரசியலமைப்புச் செயற்பாடுகளிலிருந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி விலகவேண்டும்.

6. தற்போதை சாட்சிகளின் அடிப்படையில், பிணை முறி விவகாரத்தின் ஊடாக வங்கிகளில் கொள்ளையிட்டவர்களுக்கு எதிராக, எவ்விதமான தராதரங்களுமின்றி, கடுமையான சட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

7. சட்டத்தின் ஆட்சியை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு, ஒவ்வொருநாளும் பலப்படுத்திக் கொண்டிருக்கின்ற பாதாள உலகக்கோஷ்டியினரின் மனிதப்படுகொலை சங்கிலியை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

என்பவையே அக் கோரிக்கைகளாகும். ஒன்றிணைந்த எதிரணி உறுப்பினர்கள் பலர், வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளமையால்,இந்தக் கடிதத்தில் கையொப்பமிடவில்லை என்றும், எனினும், கடிதத்தின் உள்ளடக்கத்துக்கு அவர்கள் அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

### புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைக்கே மாறிவிட்டார்களென வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். அதிகாரப் பகிர்வைக் கைவிட வேண்டும் என்று முன்னைய ஜனாதிபதி ராஜபக்ச இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும் போது கூறியுள்ளார். இது பற்றி உங்கள் கருத்து என்ன எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்து அவர்,

"ஆங்கிலேயர் வெளியேறும் போது சிறுபான்மையினரை நீதியாக, நேர்மையாக, சுய கௌரவத்துடன் அவர்கள் வாழ வழி வகுப்பார்கள் என்று கருதியே சிங்கள அரசியல்த் தலைவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்துச் சென்றார்கள். வெள்ளையர்கள் செல்லும் வரையில் நல்லவர்கள் போல் நடித்து அதிகாரம் அவர்கள் கைகளுக்கு வந்தவுடன் சிங்கள மக்கட் தலைவர்கள் தமது சுய ரூபத்தை வெளிக்காட்டி விட்டார்கள். சோல்பரி பிரபு சுதந்திரம் அளித்து பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர் டீ.ர்.ஃபார்மர் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் சிங்கள மக்கட் தலைவர்கள் இவ்வாறு சிறுபான்மையினருக்கு எதிராக நடப்பார்கள் என்று அறிந்திருந்தால் ஒரு சமஷ்டி அரசையே தந்துவிட்டுச் சென்றிருக்கலாம் என்று அங்கலாய்த்தார்- என்றும் தெரிவித்துள்ளார். (எ)

### அரியாலைப் படு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சலாகே இந்திக புஷ்ப குமார ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் நேற்று யாழ். நீதிமன்ற நீதிவான் எஸ்.சதீஸ்தரன் முன் அவரது இல்லத்தில் முற்படுத்தப்பட்டனர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி மணியம் தோட்டம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது டொன் பொஸ்கோ ரிக்மன் என்ற 24 வயதுடைய இளைஞன், மற்றொரு மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலை தொடர்பாக விசாரணைகளை நடத்தும் சிறப்பு புலனாய்வுக் குழுவினர், பண்ணையில் உள்ள சிறப்பு அதிரடிப்படை முகாமில் இருந்து, கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி, முச்சக்கர வண்டி, உந்துருளி என்பனவற்றைக் கைப்பற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

### மாணவர் அழைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவசக்தி ஆனந்தன் கலந்துகொண்டார். அக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வர மற்றும் ஈபிடிபியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பிருமான டக்ளஸ் தேவானந்தா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அங்கஜன் இராமநாதன் ரெலோ கட்சி சார்பில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோரே கலந்துகொண்டனர்.

இவர்கள் மாணவர்களின் இந்த முயற்சிக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியதோடு, மாணவர்களுடன் அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைக்கக் கோருவதற்கு வருவதாகவும் உத்தரவாத மளித்துள்ளனர்.

இந்நிலையில் மாணவர்களின் அழைப்பை உதாசீனம் செய்து கலந்து கொள்ளத் தவறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது பகிரங்கமாகக் கண்டனங்களை வெளியிட்ட மாணவர்கள் தமிழ்த் தலைவர்கள் வரலாற்றுத் தவறிழைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதேவேளை, தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று மாலை யாழ்.நகரிலுள்ள விடுதி ஒன்றில் நடைபெற்ற புதிய அரசியலமைப்பு தொடர்பில் விளக்கமளிக்கு கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர். (எ)

### விஜயகலா சொன்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யற்ற சிக்கலுக்கு ஆளாகியிருப்பதால் அதற்குப் பின்னரான போராட்டங்களில் பங்கேற்பதில்லை" என்பதாக அவரது விளக்கம் அமைந்துள்ளது. எனினும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியான அவர் இவ்வாறு காரணங்கள் கூறி மக்கள் போராட்டங்களில் அவர் பங்கேற்க மறுப்பது நகைப்பிற்குரியது என பல்கலைக்கழக மாணவர்கள் குறிப்பிட்டிருந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்–பெண் சமத்துவம் சாத்தியம் இல்லை

ஆண் - பெண் சமநிலை இனி வரும் 100 ஆண்டுகளுக்குச் சாத்தியம் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உலகப் பொருளாதாரப் பேரவையின் ஆய்வில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

144 நாடுகளில் பெண் மற்றும் ஆண்களுக்கான பொருளாதார வாய்ப்புகள், கல்வி, அரசியல் பங்கேற்பு மற்றும் சுகாதாரம் போன்ற விடயங்களின் கீழ் 2006ஆம் ஆண்டு முதல் புள்ளி விபரங்கள் திரட்டப்பட்டன.

இவற்றின் அடிப்படையில் ஆண் - பெண் சமத்துவநிலையில் மிகப் பெரிய இடைவெளிகள் இருப்பதாகவும், இவை முழுமையாகத் தீர்க்கப்படுவதற்குப் பல ஆண்டுகள் தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 741 மக்களுக்கு மரண தண்டனை

ஈராக், நவ.04




ஈராக்கின் மோசல் நகரில் சுமார் 741 பொதுமக்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் மரண தண்டனைக்கு உள்ளாக்கி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை இதனைத் தெரிவித்துள்ளது. அத்துடன் தீவிரவாதிகள் மிகப் பெரிய அளவிலான மனிதக் கடத்தல்களையும் நடத்தி இருப்பதுடன், பொதுமக்களை மனிதக் கேடயங்களாகவும் பயன்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் ஈராக்கியப் படையினர் மேற்கொண்ட குற்றங்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட்ராட் செயிட் அல் ஹுஸைன் இதனைத் தெரிவித்துள்ளார். (இ)



# முடங்கிய டிரம்ப்!

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் டுவிட்டர் கணக்கு சுமார் 11 நிமிடங்கள் செயற்பாடின்றி இருந்தது. இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப், 2009ஆம் ஆண்டு முதல் 'டுவிட்டர்' சமூக வலைத்தளத்தில் கணக்கு வைத்துள்ளார்.

2016ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது டுவிட்டர் இணையத்தளத்தின் மூலம் தேர்தல் பிரசாரம் மற்றும் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.

தற்போது ஜனாதிபதியான பிறகும் தொடர்ந்து டுவிட்டரைப் பயன்படுத்தி வருகிறார். இவரை 4 கோடி 17 இலட்சம் பேர் வரை பின் தொடர்கின்றனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை அவரது 'டுவிட்டர்' கணக்கு திடீரென முடங்கியது. சுமார் 11 நிமிடங்கள் செயற்பாடின்றி இருந்தது. அவரது டுவிட்டர் பக்கத்துக்குச் சென்று தொடர்பு கொண்ட போது எந்த விதமான தகவலும் கிடைக்கவில்லை.

எனினும், பின்னர் அது சரியாகி இயங்கத் தொடங்கியுள்ளது.

## நியூயோர்க் தாக்குதல்: பொறுப்பேற்றது ஐ.எஸ்.

# பயங்கரவாதத்துக்கு எதிராக இணையும் மோடி-டிரம்ப்

அமெரிக்கா, நவ.04


பயங்கரவாதத்துக்கு எதிராக இணைந்து போராட இந்தியப் பிரதமர் மோடியும், அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும் உறுதி பூண்டுள்ளனர் என வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் மன்ஹட்டன் பகுதியில் கடந்த 31ஆம் திகதி பாதசாரிகள் மீது லொறியை ஏற்றிப் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 8 பேர் உயிரிழந்ததுடன், 10இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களு டன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்குப்பின் நிகழ்ந்த மிகப்பெரிய தாக்குதலாகக் கருதப்படும் இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட சைபோவ் என்ற பயங்கரவாதியைப் பொலிஸார் சுட்டுப்பிடித்தனர்.

குறித்த தாக்குதலைத் தாம் மேற்கொண்டதாக ஐ எஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். இந்தக் கொடூரத் தாக்குதலுக்கு உலகத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், இதில் யிரிழந்தவர்களுக்கும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# 20 கிரகங்களில் உயிர் வாழலாம்

அமெரிக்கா, நவ.04

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் புதிதாக 20 கிரகங்களைக் கண்டறிந்துள்ளது. இவை உயிரினங்கள் வாழத் தகுதியான கிரகங்களாகும் எனத் தெரிவித்துள்ளது.

நாசா மையம், 'கெப்லர்' எனும் டெலஸ்கோப் மூலமாகப் புதிய கிரகங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இப்போது கண்டுபிடிக்கப்பட்ட 20 கிரகங்களில் வேற்றுக் கிரகவாசிகள் வசிக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட கிரகங்களில் கே.ஓ.ஐ-7923.01 என்ற கிரகம் பூமியைப் போல 97 சதவீத பரப்பளவு கொண்டதாகவும், குளிர்ச்சியான காலநிலையைக் கொண்டதாகவும் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், அந்தக் கிரகத்தில் இதமான வெப்பம், குளிர்ச்சியான தண்ணீர் மற்றும் 70 முதல் 80 சதவீத அளவில் திட படிவங்களும் உள்ளன. கண்டுபிடிக்கப்பட்ட புதிய கிரகங்கள் பலவற்றில் சூரியனைப் போன்று நட்சத்திர சுற்று வட்டப் பாதைகள் உள்ளதாகவும், சில கிரகங்கள் சூரியனை 395 நாட்களிலும், சில கிரகங்கள் 18 நாட்களிலும் சுற்றி வருவதாகவும் நாசா தெரிவித்துள்ளது.

# வதந்திகளை நம்ப வேண்டாம்



சென்னை, நவ.04

பிரபல பின்னணிப் பாடகி பி.சுசீலா இறந்துவிட்டார் எனப் பரவிய தகவலுக்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் இறந்துவிட்டார் என வட்ஸ் அப்பில்செய்தி பரவியது. இதையடுத்து இது குறித்து பி.சுசீலா விளக்கமளித்துள்ளார்.

இதுகுறித்து டுவிட்டரில் கூறியுள்ள அவர்,


"நான் நலமுடன் இருக்கிறேன். வதந்திகளை நம்ப வேண்டாம்" என்று தெரிவித்துள்ளார்.

# விசாரணை ஒத்திவைப்பு

லண்டனிலிருந்து நேற்றுமுன்தினம் நாடு திரும்பிய நவாஸ் ஷெரீப்பிடம், தேசிய பொறுப்புடமை நீதிமன்ற அதிகாரிகள், நேரில் ஆஜராவதற்கான சம்மனை ஒப்படைத்தனர். இதைப் பெற்றுக் கொண்ட நவாஸ் ஷெரீப், நேற்று ஆஜரானார்.

விசாரணை தொடங்கியதும், இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் விரிவான உத்தரவைப் பிறப்பிக்கவில்லை எனவும் அதுவரை வழக்கு விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் என்றும் நவாஸ் ஷெரீப் தரப்பில் மேலும் கோரிக்கை வைக்கப் பட்டது.

இதை ஏற்ற தேசிய பொறுப்புடமை நீதிமன்றம், நவாஸ் ஷெரீப்புக்கு எதிரான வழக்கை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டது.



நவாஸ் ஷெரீப் ஆஜரானதால், கோர்ட் வளாகத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

## வெங்கட் பிரபுவின்




அம்மா கிரியேஷன்ஸ் டி.சிவா, 'பார்ட்டி' என்ற பெயரில் ஒரு புதிய படத்தைத் தயாரித்து வருகிறார். இந்தப் படத்தை வெங்கட் பிரபு இயக்கவுள்ளார்.

சத்யராஜ், ஜெயராம், நாசர், ஷாம், ஜெய், சிவா, சுரேஷ் (இவருக்கு இது 300ஆவது படம்), 'கயல்' சந்திரன், ரம்யா கிருஷ்ணன், ரெஜினா, நிவேதா பெத்துராஜ், சஞ்சிதா ஷெட்டி ஆகியோர் நடித்து இருக்கிறார்கள். தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் இப்படம் தயாராக இருக்கிறது.

# டிசெம்பர் 31 இற்குள் மிகப் பெரும் சுனாமி

இந்தியா, நவ.04

டிசெம்பர் 31க்குள் இந்தியப் பெருங்கடலில் மிகப் பெரிய சுனாமி அலைகள் உருவாகி தமிழகம் மற்றும் கேரளாவில் அழிவை ஏற்படுத்த உள்ளதாகக் கேரளாவைச் சேர்ந்த பாபு கலயில் எச்சரித்து உள்ளார்.

இதுகுறித்துப் பிரதமர் மோடிக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். கேரளாவை சேர்ந்தவர் பாபு கலயில். இவர் தனக்குரிய பிரத்யேக சக்தியின் மூலம் உலகில் நடக்கும் இயற்கைப் பேரிடர்கள், மாற்றங்களை முன்கூட்டியே அறிவதாகக் கூறுகிறார்.

2004இல் தாய்லாந்து, இந்தியா உள்ளிட்டு நாடுகளில் பேரழிவை ஏற்படுத்திய சுனாமி அலைகள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்தார். எனினும் அதற்கு முன் சுனாமி பாதிப்பு பற்றிய போதிய புரிதல் இல்லாததால் இவரின் எச்சரிக்கையை யாரும் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. சுனாமி மட்டுமின்றிப் பல இடங்களில் நிலநடுக்கம் பற்றியும், முன்கூட்டியே தகவல் அளித்துள்ளார்.

அந்த வகையில் டிசெம்பர் 31க்குள் இந்தியப் பெருங்கடலில் அதிபயங்கர நிலநடுக்கம் ஏற்படப் போவதாக எச்சரித்துள்ளார். இந்த நிலநடுக்கத்தால் கடலில் சுனாமி அலைகள் எழுந்து தமிழகம் மற்றும் கேரளாவில் கடலோர மாவட்டங்களில் மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் எனவும் கலயில் கூறியுள்ளார்.

கடலில் ஏற்படும் இந்த நிலநடுக்கத்தால் இந்தியா மட்டுமின்றி சீனா, ஜப்பான், பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம், தாய்லாந்து, இந்தோனேஷியா, ஆப்கானிஸ்தான், இலங்கை மற்றும் வளைகுடா நாடுகளிலும் மிகப்பெரிய அளவிலான பாதிப்புகளை உருவாக்கும் எனவும் எச்சரித்துள்ளார். டிசெம்பர் 31க்குள் எந்தவொரு நாளிலும் இந்த இயற்கை சீற்றம் நடக்கலாம் என்பதால் கடலோரப் பகுதி மக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும்படி பிரதமர் நரேந்திர மோடிக்கு செப்ரெம்பர் 20இல் கடிதம் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10 வருடங்களின் பின் சறுக்கினார்!

முன்னாள் முதல் நிலை டென்னிஸ் வீரரான செர்பியாவின் ஜோகோவிச்சுக்கு, 10 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாகத் தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் இடம்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

டென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் தற்போது 7ஆவது இடத்தில் இருக்கும் ஜோகோவிச், 12 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவர். கடந்த ஜூலை மாதம் நடந்த விம்பிள்டன் போட்டியின்போது முழங்கையில் காயம் ஏற்பட்டது. இதனால் அதன்பின்னர் வந்த போட்டிகளில் அவர் பங்கேற்கவில்லை. இதுவே தற்போது அவருக்குப் பின்னடைவைக் கொடுத்துள்ளது.

அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ள தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் ஜோகோவிச் இடம்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பரிஸில் நடந்து வரும் சர்வதேச மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரில் ஆர்ஜென்ரீனாவின் மார்ட்ன் டெல் போட்ரோ, காலிறுதிக்குத் தகுதி பெற்றதன் மூலம், அவர் தரவரிசையில் முன்னேறுவதால் ஜோகோவிச்சுக்கு சறுக்கல் ஏற்பட்டுள்ளது. (ஐ)



# காத்திருந்த சமநிலை

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2ஆவது டெஸ்டை சமன் செய்ததன் மூலம், 12 வருடங்களுக்குப் பிறகு முதன் முறையாகத் தோல்வியைத் தவிர்த்துள்ளது சிம்பாவே.

சிம்பர்வே - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றது.

இந்நிலையில் 2ஆவது டெஸ்ட் புலவாயோவில் கடந்த 29ஆம் திகதி தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே 326 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய மேற்கிந்தியத்தீவுகள் 448 ஓட்டங்கள் குவித்தது. டவ்ரிச் 103 ஓட்டங்களையும், ஹோல்டன் 110 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

பின்னர் 122 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கிய சிம்பாவே அணி, 4ஆவது நாள் ஆட்ட முடிவில், 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 140 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

மீண்டும் நேற்று முன்தினம் 5ஆவது



மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடைபெற்றது. ஐந்தாவது நாள் ஆட்டம் முடிவடையும் நிலையில் இருந்ததால் சிம்பாவே அணி 144 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 301 ஓட்டங்கள் சேர்த்திருக்கும்போது போட்டியை முடித்துக்கொள்ள இரண்டு அணித் தலைவர்களும் சம்மதம் தெரிவித்தனர். இதனால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றிருந்ததால் 1-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இந்தப் போட்டியைச் சமநிலையில் முடித்ததன் மூலம் சிம்பாவே அணி, 12 வருடங்களுக்குப் பிறகு டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தவிர்த்துள்ளது. (ஐ)

# இப்படியே போனால் அது எப்படி முடியும்?



“இலங்கைக் கிரிக்கெட் அணி இதே நிலையில் இருந்தால் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் வெற்றி பெறுவது கடினம்” என முன்னாள் அணித்தலைவர் அர்ஜுனா ரணதுங்க கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

“இந்தியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள தொடரில் இலங்கை அணி வெற்றி பெறுவது கடினமாக இருக்கும்.

“இதே நிலையில் இருந்தால் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்தை வெல்வதும் கடினம்தான். இலங்கை வீரர்கள் திறமையானவர்கள்தான். ஆனால் கிரிக்கெட்டை நிர்வகிக்க முடியாத நிர்வாகமே இன்று காணப்படுகிறது.

வீரர்களிடம் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்களின் மனநிலையைச் சரி செய்து நாட்டுக்காக விளையாட வைத்தால் வெற்றி பெறுவது உறுதி” எனக் கூறியுள்ளார். (ஐ)





# மந்திர சர்ச்சை!

இலங்கைக் கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை மந்திர சக்தியால்தான் வெற்றிபெற்றது என்ற சர்ச்சை நீண்டுகொண்டே செல்கிறது.

இலங்கை அணி, பாகிஸ்தானை வெற்றி பெற்றதற்கு தான் செய்த செய்வினை மற்றும் மந்திர செயல்தான் காரணம் என இலங்கை மந்திராவதி ஒருவர் கூறிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

இதை இலங்கை அணியின் விளையாட்டுத் துறை அமைச்சர் முற்றிலுமாக மறுத்ததோடு, குறித்த மந்திரவாதி மீது வழக்குத் தொடர்வேன் எனவும் எச்சரித்தார்.

பின்னர், தொடர் முடிந்து இலங்கை திரும்பிய இலங்கை அணியின் தலைவர் தினேஷ் சண்டிமால், பாகிஸ்தானுடன் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்கு முன்னர் மந்திரவாதியிடம் சிறப்பு ஆசீர்வாதம் பெற்றதாகக் கூறினார்.

இது குறித்துத்தற்போது கருத்துக் கூறியுள்ள பாகிஸ்தான் அணித்தலைவர் அகமது,

“ஒரு இஸ்லாமியராக உலகில் ஒரு சக்தி இருக்கிறது என நம்புகிறேன்.

ஆனால் விளையாட்டில் எல்லாம் அதை தொடர்பு படுத்திப் பார்க்கக்கூடாது, டெஸ்ட் தொடரில் துடுப்பாட்டத்தில் மோசமாகச் செயற்பட்டதால்தான் நாங்கள் தோற்றோம்”எனக் கூறியுள்ளார்.

அதேபோல பாகிஸ்தான் அணியின் முன்னாள் ஜாம்பவான் முகமது யூசுப்பும் சண்டிமாலின் கருத்தை மறுத்துள்ளார்.

கிரிக்கெட்டுடன் இதுபோன்ற விடயங்களைச் சேர்க்கக்கூடாது எனவும் சரியாக விளையாடாததே பாகிஸ்தானின் தோல்விக்குக் காரணம் எனவும் கூறியுள்ளார். (ஐ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 04.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.